# மேட்டுப்பாளையம் நகராட்சி

07.02.2018ம் தேதி புதன்கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

[1] உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மறுவரையறை மேற்கொள்வது தொடர்பான வழிமுறைகள் அட்டவணைகள் மற்றும் உத்தேச கால அட்டவணை (Tentative Schedule) ஆகியவைகளை அனுப்பி வார்டு மறுவரையறை செய்ய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து வார்டு மறுவரையறை ஆணைய கடிதம் எண். 3174/17/EG1, நாள். 19.10.2017 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 23.10.2017ம் தேதிய 23617/16/எம்3, கடிதங்கள் வரப்பெற்றதன் அடிப்படையில் மேட்டுப்பாளையம் நகராட்சியில் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும், வார்டில் உள்ள குடியிருப்புகளின் அடிப்படையிலும் வார்டு மறுவரையறை பணிகள் முடிக்கப்பட்டு ஒப்புதலுக்காக உத்தேச வரைபடங்கள் உரிய படிவங்களில் பூர்த்தி செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் திருப்பூர் அவர்கள் பரிந்துரையுடன் மாவட்ட மறுவரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் கோவை அவர்கள் மூலமாக உறுப்பினர் செயலர் வார்டு மறுவரையறை ஆணையம் சென்னை அவர்கள் அலுவலத்திற்கு அனுப்பப்பட்டது.

அதன் பேரில் பொதுமக்கள் மற்றும் அனைத்து உள்ளூர் கட்சி பிரமுகர்களிடம் இருந்து 12.01.2018க்குள் ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் பெற்று அதன் பேரிலும் மற்றும் அதன் தொடர்ச்சியாக கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 01.02.2018 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதன் பேரிலும் மேட்டுப்பாளையம் நகராட்சி அலுவலகத்தில் 06.02.2018 அன்று திருப்பூர் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் அவர்களால் நடத்தப்பட்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டதன் பேரிலும் தொடர்புடைய அனைத்து படிவங்கள் மற்றும் வரைபடங்களில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு தயார் செய்யப்பட்ட தற்போதைய திருத்திய இறுதி வார்டு மறுவரையறை கருத்துருக்கள் மற்றும் வரைபடங்களுக்கு ஒப்புதல் வழங்கி வார்டு மறுவரையறை ஆணையத்திற்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | வார்டுகள் மறுவரையறை செய்வது தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்ட திருத்திய இறுதி படிவங்கள், வரைபடங்கள் மற்றும் கருத்துருக்களுக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.4040/2013/எப்1) |
| தீர்மானம் எண் 268 | : | அனுமதிக்கப்பட்டது |

[2] இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிம இனங்களுக்கு 01.02.2018–ல் இரண்டாவது முறையாக ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக்கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் லாரி ஸ்டேண்டில் லாரிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஆகியவைகளுக்கு கீழ்க்காணும் விபரப்படி ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1) பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.வி.மாரியப்பன் என்பவர் ஆண்டொன்டிறிற்கு ரூ.12,15,500/– ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி தொகையானது சென்ற ஆண்டைக் காட்டிலும், ரூ.2419/–ம் மூன்றாண்டு சராசரித் தொகையை காட்டிலும் ரூ.59268/– அதிகமாக உள்ளது.
2) லாரி ஸ்டேண்டில் லாரிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு திரு.அப்பாஸ் என்பவர் ஆண்டொன்றிற்கு ரூ.2,89,900/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி தொகையானது சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.14,275/– 3ஆண்டு சராசரித் தொகையை காட்டிலும் ரூ.27192/– அதிகமாகவும் உள்ளது.

எனவே, மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்றுக்கொண்டு இவ்வினங்களை ஒப்படைப்பு செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம். |
| தீர்மானம் எண் 269 | : | அனுமதிக்கப்பட்டது |

[3] இந்நகராட்சி பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஈப்பு தா40c 7079ல் உள்ள கிளட்ச் மற்றும் பிரேக் பழுதடைந்துள்ளது. மேற்படி ஈப்பில் உள்ள பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச ரூ.15,000/-ற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.287/2018/இ1 |
| தீர்மானம் எண் 270 | : | அனுமதிக்கப்பட்டது |

[4] பொறியியல் பிரிவு வரும் ஈப்பு எண்.தா40C 7079ல் உள்ள பழுதுகளை சரி செய்வதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டது. ஈப்பிற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்ட பணிமனைகள் அளித்துள்ள விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல்கள் தயார் செய்யப்பட்டு ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களது ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | R.C. Sekar, Engineering & Hydralics,<br>Kalingarayanpalayam, Erode. | ரூ.14,950/– |
| 2 | Thirumurugan Industries Works,<br>Erode Road Muthur | ரூ.14,900/– |
| 3 | Sri Bagyalakshmi Motor Works,<br>63 Karugalpalayam, Erode. | ரூ.14,800/– |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) இவ்வாகனம் ஆணையர் அவர்களால் பயன்படுத்தப்படும் வாகனம் என்பதால் ஆணையர் அவர்கள் உயரதிகாரிகள் ஆய்வு கூடங்களுக்கு மற்றும் குடிநீர் விநியோக பணிகளை கவனிக்க செல்ல உள்ளதால் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின்முன் அனுமதி எதிர்நோக்கி குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள Sri Bagyalakshmi Motor Works பணிமனைக்கு பணி உத்தரவு வழங்கவும் மற்றும் தொகையினை வழங்கவும் அனுமதி அளிக்கலாம்.<br>ந.க.எண்.287/2018/இ1. |
| தீர்மானம் எண் 271 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[5] இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் வணிக வளாக கடைகள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டதால் இக்கடைகளுக்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகைகளை காலம் கடந்த வைப்புத் தொகையிலிருந்து திருப்பி வழங்கிட தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வரிசை எண் | கடை எண் | விபரம் | பெயர் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | 48 | பேருந்து நிலைய கடை | மைதீன் | 5265 |
| 2 | 7,14,15,49 | பேருந்து நிலைய கடை | ஷெரிப் | 99186 |
| 3 | – | பேருந்து நிலைய அசைவ உணவகம் | அப்துல்லா | 41157 |
| 4 | – | பேருந்து நிலைய சைவ உணவகம் | முகம்மது | 48276 |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2327/2018/அ1 |
| தீர்மானம் எண் 272 | : | அனுமதிக்கப்பட்டது |

[6] பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN40B 1483 லாரியில் உள்ள பேட்டரி பழுதடைந்துவிட்டதால் புதிய பேட்டரி ஒன்று வாங்கி கொள்ள ரூ.12,000/– ற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரவும் மற்றும் விநியோக உத்தரவு |

| | | |
|---|---|---|
| | | வழங்கவும் தொகை வழங்கவும் ஒப்புதலுக்கு<br>ந.க.எண்.4287/2017/இ1 |
| தீர்மானம் எண் 273 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[7]

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TN40B 1483 லாரியில் உள்ள டயர்கள் பழுதடைந்துவிட்டதால் புதிய டயர்கள் வாங்கி வழங்குமாறு ஓட்டுநர் விண்ணப்பித்துள்ளார். எனவே பழுதான டயர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.80,000/–ற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி விலைப்புள்ளி கோரவும் மற்றும் விநியோக உத்தரவு வழங்கவும் தொகை வழங்கவும் ஒப்புதலுக்கு<br>ந.க.எண்.4287/2017/இ1 |
| தீர்மானம் எண் 274 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[8]

இந்நகராட்சி கட்டுப்பாட்டிலுள்ள பள்ளி சத்துணவு மையங்களுக்கு, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவுப்பிரிவு) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.343/2017/க்யூ3. நாள்.28.01.2018–படி இலவச அரவை இயந்திரங்கள் மற்றும் கலவை இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இயந்திரங்கள் கோயம்புத்தூர் பீளமேடு சிந்தாமணி குடோனிலிருந்து நகராட்சி பள்ளி சத்துணவு மையங்களுக்கு எடுத்து வரப்பெற்றுள்ளதற்கு வண்டி வாகன கட்டணம் கீழ்க்கண்டவாறு வழங்கக்கேட்டு திரு.சௌந்தரராஜன் தந்தை பெரியார் வீதி மேட்டுப்பாளையம் என்பவர் கேட்டுள்ளார்.

| வரிசை எண் | நாள் | அரவை இயந்திரம் | கலவை இயந்திரம் | மொத்தம் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 20.07.2017 | 8 | – | 8 | ரூ.2500 |
| 2 | 14.12.2017 | 9 | – | 9 | ரூ.2000 |
| 3 | 09.02.2018 | 17 | 17 | 17 | ரூ.3500 |
| | | | | **மொத்தம்** | **ரூ.8000** |

மேற்படி தொகை ரூபாய்.8000/–(ரூபாய் எட்டாயிரம் மட்டும்) பொது நிதியில் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி, மன்றப் பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2629/2017/என்1 |
| தீர்மானம் எண் 275 | : | அனுமதிக்கப்பட்டது |

[9]

கல்வி நிதி 2017–18–ன் கீழ் 25.01.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குப்பட்ட அனைத்து நகராட்சி பள்ளிகளுக்கும் நவீன முறையில் பச்சை/வெள்ளை செராமிக் முலாம் பூசப்பட்ட எழுது பலகைகள் அமைத்தல்.<br>(25 எண்ணிக்கைகள்) | 6.50 | HITECH & CO Madurai. | மதிப்பீட்டிற்கு சமம் |
| | | | SUXES ENGINEERING Coimbatore | 2.41% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து நகராட்சி பள்ளிகளுக்கும் நவீன முறையில் வெள்ளை செராமிக் | 3.50 | HITECH &CO Madurai. | 0.27% மதிப்பீட்டிற்கு குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | முலாம் பூசப்பட்ட கீழ்தளக் குறிப்புப்பலகைகள் அமைத்தல். (95 எண்ணிக்கைகள்) | | SUXES ENGINEERING Coimbatore | 2.77% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து நகராட்சி பள்ளிகளுக்கும் நவீன முறையில் பச்சை செராமிக் முலாம் பூசப்பட்ட கீழ்தளக் குறிப்புப்பலகைகள் அமைத்தல். (270 எண்ணிக்கைகள்) | 9.85 | HITECH &CO Madurai. | 0.27% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | SUXES ENGINEERING Coimbatore | 2.77% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிக்கு (வ.எண்.1 முதல் 3 வரையில்) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள HITECH &CO Madurai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மாணவர்களின் கல்வி நலன் கருதி உடன் இப்பணிகளை மேற்கொள்ளவும் மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இப்பணியின் அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்க முன் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.1643/2017/இ1 |
| தீர்மானம் எண் 276 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

# மேட்டுப்பாளையம் நகராட்சி

26.02.2018ம் தேதி திங்கட்கிழமை மாலை 04.30 மணிக்கு நடைபெறவுள்ள மேட்டுப்பாளையம் நகராட்சி நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

## <u>கூட்டப் பொருள்</u>

[1]

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிம இனங்களுக்கு மூன்றாவது முறையாக 13.02.2018–ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1) அண்ணா தினசரி காய்கறி சந்தைப் பேட்டையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம்.
2) அண்ணா தினசரி காய்கறி சந்தைக்கு அருகில், அரசு பொது மருத்துமனைக்கு பின்புறம் உள்ள கட்டண கழிப்பறைகள் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
3) நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உள்ள 16 தென்னை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம்.

மேற்படி இனங்களில் ஒப்பந்தப்புள்ளிகள் எதுவும் வரவில்லை.
வரிசை எண்.1–ற்கு மட்டும் திரு. பாலன் என்பவர் ஆண்டொன்றிக்கு ரூ.14,12,500/–க்கு ஏலம் கோரியுள்ளார்.
மேற்படி தொகையானது சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.1,94,238/–ம், மூன்றாண்டு சராசரித் தொகையை விட ரூ.2,51,329/– அதிகமாகவும் உள்ளது.
எனவே அண்ணா தினசரி காய்கறி சந்தைப் பேட்டையில் சுங்கம் வசூலிக்கும் உரிம இனத்தை திரு.பாலன் என்பவருக்கு ஒப்படைப்பு செய்ய தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4555/2017/அ1 |
| <u>தீர்மானம் எண் 277</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[2]

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் தா40 பி1497 ல் உள்ள பழுதுகளை சரி செய்து தகுதி சான்று பெற வேண்டி உள்ளது. எனவே இவ்வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–ற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரவும், பணி உத்திரவு வழங்கவும் மற்றும் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4360/2017/அ1 |
| <u>தீர்மானம் எண் 278</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[3]

மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 25HP, 60HP, 125HP பம்பின் பழுதுகள் அகற்றி இயக்கிக்கொடுக்கவும், தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தேவையான உதிரி சாமான்கள் விநியோகம் செய்யவும் 19.01.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு, 08.02.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | M/S அல்கெட் இன்டஸ்டரீஸ்,<br>32/A, ஊட்டி ரோடு,<br>மேட்டுப்பாளையம் | ரூ.3,20,000 | ரூ.3,18,230 |
| 2 | ஸ்ரீ பவர் இன்ஜினியர்ஸ்,<br>109, துரைசாமி நாயுடு லேஅவுட்,<br>பீளமேடு, கோயம்புத்தூர். | ரூ.3,20,000 | ரூ.3,20,970 |

மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட இணிவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள அல்கெட் இண்டஸ்டரீஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், குடிநீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.453/2018/எப்1 |
| <u>தீர்மானம் எண் 279</u> | : | அலுவலகக்குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

[4]

திரு. என்.ரவிக்குமார் என்பவர் நகராட்சி பேருந்து நிலையத்தில் பொது மக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் பொது மக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் பொது கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொது நிகழ்ச்சிகள் நடப்பதற்கு அனுமதி வழங்க கூடாது என கோரி மேட்டுப்பாளையம் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No/19/2018 ல் வழக்கு தொடர்ந்துள்ளார். எனவே மேற்படி வழக்கிற்கு வழக்கு கட்டணம் ரூ.7,500/– நகராட்சி வழக்கறிஞருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.453/2018/எப்1 |
| <u>தீர்மானம் எண் 280</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[5]

மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவ்வப்போது ஏற்படும் பம்பிங் மெயின் மற்றும் பகிர்மானக் குழாய் உடைப்புகள் சரி செய்யவும், பொதுக்குழாய், பொதுக் கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும், 23.01.2018ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு 09.02.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | எம். வேலுச்சாமி,<br>6–C, கெண்டையூர்,<br>மேட்டுப்பாளையம். | ரூ.2,00,000/– | ரூ.1,96,426<br>0.02% குறைவு. |
| 2 | கே. வேலுச்சாமி,<br>ஒப்பந்ததாரர்,<br>பாலப்பட்டி. | ரூ.2,00,000/– | ரூ.1,99,631<br>1.61% அதிகம். |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதைவிட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள எம்.வேலுச்சாமி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, குடிநீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.000282/2017/இ1. |
| <u>தீர்மானம் எண் 281</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[6]

பொது நிதி 2017–18ன் கீழ் 09.02.2018ல் தார்சாலை செப்பணி முதல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| | |

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மதிப்பீட்டு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சி பகுதியில் குடிநீர் குழாய் உடைப்புகள், பழுதுகள் புதிதாக குடிநீர் குழாய் இணைப்புகள் கொடுக்கவும் வெட்டப்பட்ட தார் சாலைகளை செப்பணிடுதல் | 4.00 | வி. செல்வராஜ் | 0.11% மதிப்பீட்டிற்கு குறைவு. |
| | | | ஜெகநாதன் | 3.93% மதிப்பீட்டிற்கு அதிகம். |

மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டிற்கு 0.11% குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் வி.செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கவும் பொதுமக்களின் போக்குவரத்து நலன் கருதி உடன் பணியினை மேற்கொள்ளவும் மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>2) பணியின் அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்க முன் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1643/2017/இ1 |
| <u>தீர்மானம் எண் 282</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[7]

இந்நகராட்சிக்கு சொந்தமான குத்தகை உரிம இனங்கள்,

1) அண்ணா தினசரி காய்கறி சந்தைப் பேட்டைக்கு அருகில் அரசு பொது மருத்துமனைக்கு அருகில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியல் அறைகள் உபயோகிப்போரிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2) இந்நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் உள்ள 16 எண்ணிக்கை தென்னை மரங்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமம் .

மேற்படி உரிம இனத்திற்கு நான்காவது முறையாக 21.02.2018ல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரிசை எண்.1 ற்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர ஒருவரும் வரவில்லை.
வரிசை எண்.2ற்கு ஒப்பந்தப்புள்ளி எதுவும் வரவில்லை. ஏலம் கோர திரு.வேலுச்சாமி என்பவர் மட்டும் ஆண்டொன்றிற்கு ரூ.3,590/–க்கு ஏலம் கோரினார். இத்தொகையானது சென்ற ஆண்டைக்காட்டிலும் ரூ.172/– அதிகமாகவும், 3 ஆண்டு சராசரித் தொகையைக் காட்டிலும் ரூ.332/– அதிகமாக உள்ளது. இவ்வினத்திற்கு 3 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒருவரும் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர வரவில்லை.
திரு.வேலுச்சாமி என்பவரது ஏலக் கேள்வித் தொகை ரூ.3590/–ஐ ஏற்றுக் கொள்ள தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4555/2017/அ1 |
| <u>தீர்மானம் எண் 283</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[8]

மேட்டுப்பாளையம் நகராட்சி விநாயகர் சதுர்த்தி மற்றும் பவானி ஆற்றில் உள்ள கோவில்களில் மின் விளக்குகள் அமைக்க 23.01.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு, 09.02.2018–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. சிவலிங்கம்,<br>கீர்த்தனா சவுண்ட்ஸ் & லைட்ஸ்,<br>மினி ஆஸ்பத்திரி அருகில்,<br>மேட்டுப்பாளையம். | ரூ.49,000 | ரூ.48,600 |
| 2 | திரு. சசி சவுண்ட்ஸ் & சர்வீஸ்,<br>21, சொக்கலிங்கம் பிள்ளை தெரு,<br>மேட்டுப்பாளையம். | ரூ.49,000 | ரூ.51,040 |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சிவலிங்கம் என்ற நிறுவனத்தன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பண்டிகை அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கலாம். ந.க.எண்.2954/2017/இ1 |
| தீர்மானம் எண் 284 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[9]

மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள ஆழ்துளை கிணறுகளில் உள்ள நீர் மூழ்கி மோட்டார்கள் காயில் ரீவைண்டிங் மற்றும் பம்பின் பழுதுகள் அகற்றி இயக்கவும், 23.01.2018–ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு, 09.02.2018–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு. வேலுச்சாமி,<br>6–EB காலனி,<br>மேட்டுப்பாளையம். | ரூ.2,50,000 | ரூ.2,50,447 |
| 2 | எ. துரைச்சாமி,<br>எ.பி. ரீவைண்டிங் ஒர்க்ஸ்,<br>16, ரயில்வே ஸ்டேஷன் ரோடு,<br>மேட்டுப்பாளையம். | ரூ.2,50,000 | ரூ.2,46,687 |

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | மேலே பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் வரிசை எண்.1ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றதை விட குறைவாக உள்ளதால், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள எ.துரைச்சாமி, என்ற நிறுவனத்தன் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, தண்ணீர் அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கலாம். ந.க.எண்.281/2017/இ1 |
| தீர்மானம் எண் 285 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[10]

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் தா40 0989 லாரியில் உள்ள பழுதுகள் சரி செய்ய 08.02.2018 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்ட பணிமனைகள் அளித்துள்ள ஒப்பந்த புள்ளிகளை ஒப்பு நோக்கு பட்டியல் தனி அலுவலரின் முன் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | R.C. Sekar,<br>Engineering & Hydralics,<br>Kalingarayanpalayam, Erode. | ரூ.1,22,000 |
| 2 | Sri Bagyalakshmi Motor Works,<br>63 Karungalpalayam, Erode. | ரூ.1,19,000 |

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதியை எதிர்நோக்கி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.2ல் கண்ட Sri Bagyalakshmi Motor Works பணிமனையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், பணி உத்திரவு வழங்கவும், செலவுத் தொகையினை வழங்கவும் ஒப்புதலுக்கு. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ந.க.எண்.3696/2017/இ1 |
| | | <u>தீர்மானம் எண் 286</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[11]

இந்நகராட்சிக்கும் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திற்கு (சாமண்ணா வாட்டர் ஒர்க்ஸ்) 2017–18–ஆம் ஆண்டிற்கான சொத்துவரியினை செலுத்தப் கோரி தேக்கம்பட்டி தனி அலுவலர் அவர்களிடமிருந்து கேட்பு அறிக்கை வரப்பெற்றுள்ளது. மேற்படி சொத்துவரி ரூ.12,000/–ஐ (ரூபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) தேக்கம்பட்டி ஊராட்சிக்கும் செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவரின் முன் அனுமதி பெற்று மேற்படி சொத்துவரியை செலுத்தவும் மன்றம் அனுமதி அளிக்கலாம். ந.க.எண்.2009/11/அ5 |
| <u>தீர்மானம் எண் 287</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[12]

மேட்டுப்பாளையம் நகராட்சியின் மூலமாக மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை வளாகத்தின், புற நோயாளிகளின் பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தங்கும் விடுதி அமைத்தல் பணிக்கு DAY-NULM-SUM-4th-PSC-2017-18 திட்டத்தின் கீழ் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இணை ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் எண்.38038/2013/UPA2/நாள்.15.02.2018ல் வரப் பெற்றதில் இப்பணிக்கு முழுமானியத் தொகை ரூ.40.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது அறியப்பட்டது. எனவே இப்பணியினை மேற்கொள்ள உரிய மேல் நடவடிக்கை தொடர மன்றத்தின் பார்வைக்கு வைக்க மன்றப் பொருள் வரைவு ஒப்புதலுக்கு.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1281/2016/இ1 |
| <u>தீர்மானம் எண் 288</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[13]

பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் தா40 B1497 வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய 20.02.2018ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்ட பணிமனைகள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | Sri Bagyalakshmi Motor Works,<br>63 Vairapalayam Nall Road<br>Karungalpalayam, Erode. | ரூ.1,33,000 |
| 2 | R.C. Sekar,<br>Engineering & Hydralicks,<br>Kalingarayanpalayam, Erode. | ரூ.1,45,200 |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதியை எதிர்நோக்கி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Sri Bagyalakshmi Motor Works பணிமனையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், பணி உத்திரவு வழங்கவும், தொகையினை வழங்கவும் தனிஅலுவலரின் ஒப்புதலுக்கு. ந.க.எண்.4360/17/இ1 |

| | | | |
|---|---|---|---|
| | <u>தீர்மானம் எண் 289</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[14]

பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் தா40 C0551 வாகனத்தில் உள்ள பழுதுகள் சரிசெய்ய **08.02.2018**ஆம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்ட பணிமனைகள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | Sri Bagyalakshmi Motor Works, 63 Vairapalayam Nall Road Karungalpalayam, Erode | ரூ.1,19,000 |
| 2 | R.C. Sekar, Engineering & Hydralics, Kalingarayanpalayam, Erode. | ரூ.1,26,000 |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதியை எதிர்நோக்கி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் Sri Bagyalakshmi Motor Works பணிமனையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், பணி உத்திரவு வழங்கவும், செலவுத் தொகையினை வழங்கவும் ஒப்புதலுக்கு. ந.க.எண்.4103/17/இ1 |
| <u>தீர்மானம் எண் 290</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[15]

பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவினையொட்டி தமிழக அரசின் சாதனைகளை கோவை மாவட்டத்தில் வெளியாகும் தினமலர் நாளிதழிலில் **03.12.2017** ஆம் தேதியில் (MANI ADS)25cm & 16cm front page விளம்பரம் செய்யப்பட்டது. விளம்பரம் செய்யப்பட்டதற்கு MANI ADS நிறுவனம் தொகை ரூ.**72,660/–** ஐ வழங்குமாறு பட்டியல் வரப்பெற்றுள்ளதால் மேற்படி தொகையினை வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2199/2017/இ1 |
| <u>தீர்மானம் எண் 291</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[16]

மேட்டுப்பாளையம் நகராட்சி ஆணையர் திரு. அ. அப்துல் ரஷீத் அவர்களது ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | பதிவு செய்யலாம். |
| <u>தீர்மானம் எண் 292</u> | : | பதிவு செய்யப்பட்டது |

[17]

மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியாளர் திரு. ம. கருணாகரன் அவர்களது ஜனவரி 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண்.2894/2017/இ1) |
| <u>தீர்மானம் எண் 293</u> | : | பதிவு செய்யப்பட்டது |

[18]

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.33 நகராட்சிக்கு சொந்தமான மணி நகர் பள்ளி இயங்கி வருகிறது. மேற்கண்ட நகராட்சி பள்ளிக்கு மாணவர்கள் அதிக அளவில் கல்வி கற்கவும், மேலும் மாணவர்களின் கல்வித் திறனையும் அதிகரிக்கும் வகையில் இங்கு நவீன வகுப்பறை (Smart Class) அமைத்து அதில் அனைத்து தொழில்நுட்பங்களையும் அறியும் விதமாக கணிணிகள் பொருத்தி நவீன வகுப்பறை அமைப்பதற்கு ரூ.5.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| <u>தீர்மானம் எண் 294</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[19]

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.20 பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சுமார் 1060 குழந்தைகள் பயில்கின்றனர். மேற்கண்ட நகராட்சி பள்ளிக்கு மாணவர்கள் அதிக அளவில் கல்வி கற்கவும், மேலும் மாணவர்களின் கல்வித் திறனை அதிகரிக்கும் வகையில் இங்கு நவீன வகுப்பறை (Smart Class) அமைத்து அதில் அனைத்து தொழில் நுட்பங்களையும் அறியும் விதமாக கணிணிகள் பொருத்தி நவீன வகுப்பறை அமைப்பதற்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை கல்வி நிதியில் இருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி வழங்கலாம். |
| <u>தீர்மானம் எண் 295</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[20]

மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து நீரேற்றும் செய்யப்படும் குடிநீர் நகரில் உள்ள ஐந்து மேல்நிலைத் தொட்டிகளால் நிரப்பப்பட்டு பொதுமக்களுக்கு ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் குடிநீரில் உள்ள கிருமிகளை அழிக்க குளோரின் வாயு பயன்படுத்தப்படுகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவுப்படி குளோரின்வாயு இறுதிப் பகுதியில் 0.2PPM இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு பகுதியிலும் எத்தனை இடங்களில் ஆய்வு செய்ய வேண்டும் என்பதற்கிணங்க நகராட்சி எல்லை வரைபடம் ( Autocad )ல் வரைந்து எத்தனை பகுதிகளாக பிரிக்கவும்(Zonation) அதற்கேற்ப குளோரின் வாயு ஆய்வு செய்வதையும் வரைபடமாக வரைந்து சமர்பிக்க ஆகும் செலவினம் ரூ.28,000/–க்கு நகராட்சிகளின் சட்டம் 1920ன் படி பிரிவு–15ல் பணி மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது. (Section-15)

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 467/201 7 / இ1 ) |
| <u>தீர்மானம் எண் 296</u> | : | பதிவு செய்யப்பட்டது |

[21]

மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொது நிதி 2017–18ன் கீழ் கீழ்காணும் பணிக்கு 14.11.2017–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்குப் பட்டியல் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **பணியின் பெயர்** | **மதிப்பீடு ரூ இலட்சத்தில்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு விழுக்காடு** |
|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | வார்டு எண்.19ல் அண்ணா தினசரி மார்க்கெட் அருகிலுள்ள கட்டண கழிப்பிடத்தில் பராமத்து பணி செய்தல். | ரூ.3.80/– | M/S Sri Sakthi Construction | 0.09% மதிப்பீட்டுக்கு குறைவு |
| | | | M/S Sri Sushma Infro | 1.15% மதிப்பீட்டுக்கு குறைவு |

வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு குறைவான ஒப்பந்தப்புள்ளியாக 0.09% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரா் M/S Sri Sakthi Construction அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் பொதுமக்கள் அதிகம் பயன்பாட்டிற்கு உள்ள தினசரி மார்க்கெட் பொதுக்கழிப்பிடம் பராமத்துப் பணியினை உடன் மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கவும். தனி அலுவலா் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) பொதுமக்கள் பயன்பாட்டின் அவசியம் கருதி வேலை உத்திரவிற்கு முன் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1648/2017/இ1) |
| தீர்மானம் எண் 297 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[22]

இந்நகராட்சியில் 2017–2018ம் ஆண்டு வரி மற்றும் வரியில்லா இனங்களை 100% வசூல் செய்யும் பொருட்டு 33 வார்டுகளிலும் ஆட்டோவில் ஒலிபெருக்கி அமைத்து விளம்பரம் செய்ய ரூ.50,000/– செலவினம் மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.179 நாள்.30.10.2017ல் அனுமதி பெறப்பட்டது.

தற்போது மேலும், 31.03.2018 வரை விளம்பரம் செய்யப்பட வேண்டியுள்ளதால் கூடுதலாக ரூ.50,000/– செலவினம் மேற்கொள்ள ஆணையா் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 2423/2017/அ2 ) |
| தீர்மானம் எண் 298 | : | அனுமதிக்கப்பட்டது |

[23]

மேட்டுப்பாளையம் நகராட்சியில் அரசு மருத்துவமனை வளாகத்தில் புறநோயாளிகளின் பார்வையாளர்கள் தங்கும் விடுதி அமைத்தல் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெறும் பொருட்டு மேற்படி இடத்தில் மண்பரிசோதனை மற்றும் கட்டிடத்திற்கு கட்டிட மாதிரி வரைபடங்கள் சமா்ப்பிக்க வேண்டியுள்ளது. இதனை அடுத்து மேற்படி மண்பரிசோதனைக்கு ரூ.20,000/–மற்றும் கட்டமைப்பு மாதிரி வரைபடங்களுக்கு ரூ.16,000/– வீதம் மொத்தம் ரூ.36,000/–க்கு காசோலை வழங்க திரு.எஸ். அருள்செல்வன், C.I.T. College of Engineering என்ற முகவரிக்கு அனுப்ப அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | இப்பணி திட்டப்பணி என்பதாலும், இப்பணிக்கு உடனடியாக தொழில்நுட்ப அனுமதி பெற்று, மேல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் மேற்கண்ட தொகையினை வழங்க மன்ற முன் அனுமதி வேண்டப்படுகிறது. |
| தீர்மானம் எண் 299 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[24]

இந்நகராட்சியின் 2017–2018ம் ஆண்டுக்கான திருத்திய திட்ட மதிப்பீடு மற்றும் 2018–2019ம் ஆண்டுக்கான உத்தேச திட்ட மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு | : | பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 6262/2012/பி1) |
| தீர்மானம் எண் 300 | : | பதிவு செய்யப்பட்டது |

[25] மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வழிபாட்டுத் தலங்கள் (கோயில், மசூதி, சர்ச்,) ஆகியவற்றில் உள்ள குடிநீர் இணைப்புகள் வணிக முறையில் குடிநீர் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. தற்போது வழிபாட்டுத் தலங்களுக்கு வரும் பொதுமக்கள் குடிநீருக்கு மட்டும் தண்ணீரை பயன்படுத்துவதால் வணிகம் நடைபெறவில்லை. ஆதலால் நிலுவை இன்றி குடிநீர் கட்டணம் செலுத்தும் வழிபாட்டுத் தலங்களுக்கு மட்டும் இனிவரும் காலங்களில் வீட்டு உபயோக முறையில் குடிநீர் கட்டணத்தை மாற்ற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 000502/2018/இ1) |
| <u>தீர்மானம் எண் 301</u> | : | அனுமதிக்கப்பட்டது |

[26] பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN40B 1483 வாகனத்தில் உள்ள பழுதுகள் சரிசெய்ய **08.02.2018** ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவ்வாகனத்தில் உள்ள பழுதுகள் சரி செய்வதற்கு கீழ்க்கண்ட பணிமனைகள் ஒப்பு நோக்கு பட்டியல் தனி அலுவலரின் ஒப்புதலுக்கு

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1 | Sri Bagyalakshmi Motor Works,<br>63 Vairapalayam Nall Road<br>Karungalpalayam, Erode | ரூ.1,18,600 |
| 2 | Thirumagal Industrial work<br>83A, Erode Road,<br>Muthur | ரூ.1,27,200 |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதியை எதிர்நோக்கி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Sri Bagyalakshmi Motor Works பணிமனையின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும், பணி உத்திரவு வழங்கவும், தொகை வழங்கவும் தனி அலுவலரின் ஒப்புதலுக்கு. ந.க.எண்.3780/2017/இ1 |
| <u>தீர்மானம் எண் 302</u> | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

[27] இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN40B 1483 லாரிக்கு டயர்கள், பேட்டரி விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது. விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்கண்ட நிறுவனங்கள் அளித்துள்ள விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. (டயர்கள்) | தொகை ரூ. (பேட்டரி) |
|---|---|---|---|
| 1 | கோத்தாரி டயர்ஸ்<br>1, எஸ்.வி. கோவில் வீதி,<br>மேட்டுப்பாளையம். | 63000 | 10850 |
| 2 | ரிசப் எண்டர்பிரைசஸ்,<br>236,ஊட்டி மெயின் ரோடு,<br>மேட்டுப்பாளையம். | 62800 | 10900 |
| 3 | ரமேஷ் ஏஜென்சிஸ்,<br>235 ஊட்டி மெயின் ரோடு,<br>மேட்டுப்பாளையம். | 62000 | 10500 |

| | | |
|---|---|---|
| <u>அலுவலகக் குறிப்பு</u> | : | 1) அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களது முன் அனுமதியை எதிர்நோக்கி குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள ரமேஷ் ஏஜென்சிஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்கலாம். விநியோக உத்தரவு வழங்கலாம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஒப்புதலுக்கு.   ந.க.எண்.4287/17/இ1 |
| | | தீர்மானம் எண் 303 | : | அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது |